இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (09.04.2025) ஆணையர் அலுவலகத்தில், திருக்கோயில்களில் நிரந்தர பணியாளர்களாய் பணியாற்றி பணிக்காலத்தில் உயிரிழந்த 27 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப நல நிதியாக ரூ.75 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, ந.திருமகள், சி.ஹரிப்ரியா, சி.லட்சுமணன், இணை ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

‘மாணவர்கள் தனித்திறனோடு பட்டதாரிகளாகிட வேண்டும்’! எனும் நோக்கில் முதல்வர் தொடங்கிய

‘நான் முதல்வன்’ திட்டத்தால் 30 இலட்சம் பேர் பயன்!

சட்டப்பேரவையில் – அமைச்சர் கோவி.செழியன் பெருமிதம்!

சென்னை, ஏப். 10-

சட்டப்பேரவையில் நேற்று, கேள்வி நேரத்தில் போது பேசிய உயர்கல்வித் துறை அமைச்சர் - முனைவர் கோவி. செழியன், “மாணவர்கள் தனித்திறனோடு பட்டதாரிகள் ஆகிட வேண்டும் எனும் நோக்கில் முதல்வர் தொடங்கிய ‘நான் முதல்வன்’ திட்டத்தால் இது வரை 30 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்” என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில், கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:

ஏ.ஜி.வெங்கடாசலம்: அந்தியூரில் கலைக் கல்லூரி துவக்க அரசு முன் வருமா?

அமைச்சர் முனைவர் கோவி. செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, 11-4-2022 அன்று சட்டமன்றப் பேரவையில் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் 2022-2023 கல்வி ஆண்டு முதல் ஈரோடு மாவட்டம், அந்தியூரில் ஒரு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது!

ஏ.ஜி.வெங்கடாசலம்: அந்தியூரிலே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வழங்கப்பட்டு, தற்போது அந்தியூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலே 700 மாணவர்கள், பழங்குடியின மக்கள், பட்டியலின மாணவ மாணவிகள் மற்றும் வறுமையின் பிடியிலே இருக்கின்ற மாணவ செல்வங்களெல்லாம் படித்துக் கொண்டிருக்கிறார்கள். மூன்றாம் ஆண்டு நிறைவிலே படித்து முடிக்கவிருக்கும் மாணவ

மாணவிகள் 150 பேர் வேலைவாய்ப்புக்கும் தேர்வாகியுள்ளனர். மேலும், எங்கள் கல்லூரிக்கு கூடுதலாக B.Com. CA, B.B.A., B.C.A. ஆகிய பாடப் பிரிவுகள் இந்த ஆண்டு துவக்கப் படுமா?

அமைச்சர் முனைவர் கோவி. செழியன்: கழக அரசு அமைந்த இந்த 4 ஆண்டுகளில், 32 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உருவாக்கித் தந்த முதல்வர், நம்முடைய தன்னிகரில்லாத முதல்வர், தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு சட்டப் பேரவையின் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அறிவிக்கப்பட்டு, அதில் ஒன்று அந்தியூரில் தொடங்கப்பட்டது. அதில், தமிழ், ஆங்கிலம், வணிகவியல், கணிதம் மற்றும் கணினி அறிவியல் ஆகிய 5 பாடப் பிரிவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 700-க்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். தற்காலிக கட்டடத்தில் தான் அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் உறுப்பினர் அவர்கள் கூடுதல் பாடப் பிரிவுகள் வேண்டுமென்றும், முதுகலை பட்டங்களுக்கான பாடப் பிரிவுகள் துவங்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தற்காலிக கட்டடத்தில் இயங்குவதை அரசு கட்டடமாக மாற்றுகின்ற பெரு முயற்சியை அரசு மேற்கொள்கிறது. அது தொடரும்பட்சத்தில் கூடுதல் பாடப் பிரிவும், முதுகலை பட்டத்திற்கான பாடப் பிரிவும் முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி, வழங்கப்படும் என்பதையும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏ.ஜி.வெங்கடாசலம்: அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. மேலும், அந்தியூர் சட்டமன்றத் தொகுதியிலே Polytechnic கல்லூரி வேண்டுமென்று நீண்ட நாட்களாக எங்கள் தொகுதியினுடைய மாணவ, மாணவியர்களும், பெற்றோர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பட்டியலின மக்கள், பழங்குடியின மக்கள் வறுமையோடு கஷ்டப்படுகின்ற அந்த மாணவ, மாணவிகளின் வாழ்வாதாரத்திற்காக Polytechnic கல்லூரி எங்கள் அந்தியூரில் அமைக்கப்பட வேண்டுமென்ற மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே தங்களுடைய மானியக் கோரிக்கையில் நிறைவேற்றித் தருவார்களா?

அமைச்சர் முனைவர் கோவி. செழியன்: Polytechnic கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கை என்பது நவீன வளர்ச்சியும், பொறியியல் கல்லூரியினுடைய பெரும் ஆதிக்கமும் இருந்த காரணத்தினால் Polytechnic கல்லூரியில் மாணவர் சேர்க்கை சற்று குறைந்த வண்ணம் இருந்தது. அந்த தொய்வை போக்கக்கூடிய வகையில் தான் தன்னிகரில்லாத தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ‘நான் முதல்வன்’ திட்டத்தின்கீழ் ஒரு மாணவன் தனித் திறனோடு அவன் பட்டதாரி ஆக வேண்டுமென்று ‘நான் முதல்வன்’ திட்டத்தில் 30 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களை பயனாளிகளாக ஆக்கிய பெருமை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சாரும்.

எனவே, ‘நான் முதல்வன்’ திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலம் Polytechnic-ல் படிக்கக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்கிற பெரு முயற்சியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்கள். அப்படி இருந்தும் சில Polytechnic-களில் மாணவர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. கூடுதல் பாடத் திட்டத்தைச் சேர்த்து வரும் ஆண்டில் அந்தக் குறைகள் போக்கப்படும் என்ற நம்பிக்கையை இந்த நேரத்தில் வழங்கி, உறுப்பினர் கேட்கக்கூடிய அந்தியூர் சட்டமன்றத் தொகுதிக்கு Polytechnic, அங்கிருக்கிற மாணவர் சேர்க்கை, விகிதாச்சார அடிப்படையில் கணக்கிட்டு முதல்வர் அவர்களிடம் கலந்துபேசி விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையத்தில் வடக்கு நகர தி.மு.க. சார்பில் நீர் மோர்பந்தல் திறப்பு விழா நடந்தது. வடக்கு நகர பொறுப்பாளரும், நகராட்சி தலைவருமான விஜய்கண்ணன் தலைமை வகித்தார். பள்ளிபாளையம் பிரிவு பகுதியில் அமைக்கப்பட்ட நீர்மோர் பந்தலை மாவட்டக் கழகப். செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி திறந்து வைத்து, பொதுமக்களுக்கு இளநீர், தர்பூசணி, அன்னாசி, முலாம்பழ ஜூஸ், நீர்மோர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நகராட்சி துணை தலைவர் வெங்கடேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் செல்வராஜ், மாவட்ட பொருளர் ராஜாராம், முன்னாள் நகர செயலர் செல்வம் மற்றும் கழக நிர்வாகிகள் வார்டு செயலாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார் ஆகியோரின் முன்னிலையில் திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.ஸ்டாலின் ஏற்பாட்டில் மணலி சாஸ்திரி நகர் சந்திப்பில் நீர்மோர் தண்ணீர் பந்தலை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதாவரம் எஸ்.சுதர்சனம் திறந்து வைத்து பொது மக்களுக்கு பழங்கள் மற்றும் நீர் மோர் குளிர்பானங்கள் வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.வேல்கணேசன் டி.ஜி.ஆர். மனிவண்ணன், சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், ஆர்.டி.ரமேஷ்குமார், உதயராஜ், கோ.ராமமூர்த்தி, மங்கைலட்சுமி குலசேகரன், தயாளன், ஜெயா, மகேந்திரன், லோகேஷ்பிரபு, மோகன், சுரேஷ், மணிகண்டன், சதீஷ்குமார், மற்றும் கழக நிர்வாகிகள், கழக இளைஞர் அணி தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி

பகுதி அமைப்பாளர்கள் - பகுதி துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் பா.அருண்குமார் தலைமையில் நடைபெற்றது!

சென்னை,ஏப்.10-

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி பகுதி அமைப்பாளர்கள் - பகுதி துணை அமைப்பாளர்கள் கூட்டம் 07.04.2025 அன்று சைதாப்பேட்டை பஜார் சாலையில் அமைந்துள்ள “சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில்” மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பா. அருண்குமார் தலைமையில் மாநில மாணவர் அணி துணை செயலாளர் சென்னை மண்டல பொறுப்பாளர் தமிழ் க. அமுதராசன் முன்னிலையில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆ.ஈஸ்வரமூர்த்தி, ஜெ.சீனிவாசன், எஸ்.கே.தமிழ்வேல் கவி, எஸ்.விஷ்ணு டி.எஸ்.பி. தமிழ்செல்வன், எஸ்.யமுனாஸ்ரீ உளிள்டட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

கல்லூரியில் பயிலும் 20 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கிய கழகத்தலைவர் தாயுமானவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுக்கு சென்னை தெற்கு மாவட்ட மாணவரணி சார்பில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளினை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம் முழுவதும் அனைத்து அமைச்சர்களையும் அழைத்து தொடர்ந்து 35 நாட்கள் வாழ்த்தரங்கங்களை மிகச்சிறப்புடன் நடத்திய மாவட்ட கழக செயலாளர் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கு சென்னை தெற்கு மாவட்ட மாணவரணி சார்பில் நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நீட் தேர்வுக்கு எதிரான எங்கள் போராட்டம் எந்த வகையிலும் முடிவடையவில்லை.நீட்தேர்வு ரத்து செய்யும் வரை போராட்டம் தொடரும் என்றும்நீட் தேர்வுக்கு எதிராக தமிழ்நாடு சட்ட ரீதியான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்றும் சட்ட மன்றத்தில் அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு நன்றி

இல்லம் தோறும் இளைஞர் அணி என்கிற கோட்பாட்டின் படி கழக பற்றுள்ள இளைஞர்களை கண்டெடுத்து உருவாக்கி கழகத்தை பலப்படுத்தியதைப்போலவே இல்லம் தோறும் மாணவர் அணி கட்டமைக்க வழிகாட்டி நெறிபடுத்திவரும் இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாட்டின் துணை முதல் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி

மும்மொழிக்கொள்கை என்கிற பெயரில் மாநில அரசின் உரிமைகளை தகர்த்து மறைமுகமாக இந்தியை திணிக்கும் ஒன்றிய அரசின் செயல்களைக் கண்டித்து போர்க்குரலை எழுப்பிவரும் கழகத்தலைவர் முதல் அமைச்சர் அவர்களுக்கு எங்களின் நன்றிகள்.

+2 முடித்துவிட்டு உயர் கல்விப் பயில இருக்கும் மாணவர்களுக்கு வழிகாட்டி நிகழ்ச்சிகளை மாவட்டம்தோறும் நடத்த அறிவுறுத்தியுள்ள மாநில மாணவர அணி செயலாளர் இரா.ராஜீவ்காந்தி அவர்களுக்கு நன்றி

ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட தேசிய கல்விக் கொள்கையை எதிர்ப்பதுடன் அனைத்து கல்லூரி மாணவர்களுக்கும்புதியக் கல்விக்கொள்கையால் தமிழக மாணவர்கள் எவ்வாறெல்லாம் பாதிக்கப்படுவார்கள் என்பதை அறிந்துகொள்ளும் விதத்தில் கருத்தரங்கங்கள் நடத்துவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கோடைக்கால வெப்பத்தால் பாதிக்கப்படும் பொது மக்களுக்கு உதவிடும் விதத்தில் சென்னை தெற்கு மாவட்டம் முழுவதும் மாணவர் அணி சார்பில் நீர்மோர் பத்தலை அமைத்திட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாணவரணியில் தொகுதிக்கு 5000 மாணவர்கள் சேர்பது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது வரை தமிழ்நாடு வரலாற்றில் இல்லாத அளவுக்கு மொத்த பட்ஜெட்டில் பள்ளி கல்லூரி மாணவர்களுக்காக 55, 261 கோடி ரூபாய் ஒதுக்கி தமிழ்நாட்டு மாணவர்களின் வாழ்வில் புது வெளிச்சத்தை பாய்ச்சியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் தாயுமானவர் அவர்களுக்கு நன்றி.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் இராயபுரம் சட்டமன்ற தொகுதியில் இந்தி திணிப்பு,நிதி பகிர்வில் பாரபட்சம்,தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, இரா.செந்தில்குமார், வே.சிவகுமார், ஆகியோர் முன்னிலையில் லயோலா.கே.மதன், வை.கௌதமன், இர.பொன்இளவரசன், இ.ரவிகுமார், க.கலைச்செல்வன் ஆகியோர் துவக்கவுரையில் தலைமை கழக செய்தி தொடர்பு செயலாளர் பேராசிரியர். கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்,கழக இளம் பேச்சாளர் அ.தா.டெக்சின் ரொமேரியோ, மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம்.ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் கண்டன உரையாற்றினர். இந்நிகழ்வில் டாக்டர்.அ.சுபேர்கான், தா.இளையருணா, பி.டி.பாண்டிசெல்வம், ந.மனோகரன், மற்றும் பலர் கலந்து கொண்டனர். என்.அப்துல்மாலிக், அ.சாந்தகுமார் ஆகியோர் நன்றி கூறினர்.

த.விக்னேஸ்வரன் தலைமை! எஸ்.முரளி – நந்தனம் கி.மதி – எஸ்.ஜோயல் – ராஜா அன்பழகன் முன்னிலை!

தென்மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்!

சென்னை, ஏப். 10-

தமிழ்நாட்டு மக்களுக்கு கோடை காலத்தில் தாகம் தீர்க்க, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்க தென்மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் நீர் மோருடன் தண்ணீர் பந்தல் திறப்பு விழா இன்று (10.4.2025, வியாழக்கிழமை), காலை 9 மணியளவில் டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, கயிலாசபுரம், 125வது வட்டம் ஐ.ஜி.அலுவலகம் அருகில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.விக்னேஸ்வரன் தலைமையில், மயிலை கிழக்கு பகுதிச் செயலாளர் எஸ். முரளி, மயிலை மேற்கு பகுதி கழக செயலாளர் நந்தனம்கி.மதி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் தூத்துக்குடி எஸ். ஜோயல், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தண்ணீர் பந்தலை திறந்து வைக்கிறார்.

இதில் 125வது வட்ட கழக செயலாளர் அ.தவநேசன், 125வது வார்டு மாமன்ற உறுப்பினர் அரேவதி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தினேஷ் மாணிக்கம், எஸ்.உமாசங்கர், டான்ட்டிபிரகாஷ், ஏ.அஸ்வின்குமார், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் டி. ஜெகதிஸ்பாபு, வி.திவான்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தா.தீபன், வி. ஹேமந்த்குமார், பா.முருகேசன், எம். நிரஞ்சன் சாய், சுந்தர் ரகு, அஸ்வின் பாபு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 121 அ வட்ட தி.மு.கழகத்தின் சார்பில், நேற்று 09.04.2025 புதன்கிழமை காலையில் தண்ணீர் குடில்களை மாவட்டக் கழகச் செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர், குளிர்பானங்கள், பழ வகைகளை வழங்கினார். வட்டச் செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் மற்றும் 121 வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி.மதி எம்.சி. முன்னிலையில், நடைபெற்ற இவ்விழாவில் வட்டக் கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பி.எல்.எ.2, பி.எல்.சி. நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.

ஆளுநருக்கு எதிரான வழக்கில் உச்சநீதிமன்றம் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியதற்காகவும், முதல்வருக்கு நன்றி தெரிவித்தும் வில்லிவாக்கம் கிழக்குப் பகுதியில் பகுதிச் செயலாளர் வே.வாசு தலைமையில் வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னணியினர் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.